# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2224 - 2021 අප්‍රේල් මස 16 වැනි සිකුරාදා - 2021.04.16**

*2224 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 2 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |



**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, ஏப்பிறல் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*



1 - B 082222 - 353 (2021/04)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## பிசுக்கால் ஏல விற்பனை
## கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில்

*1994 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட வகையில் 1990 ஆம் ஆண்டு இல. 02 என்ற கடன் மீள் அறவிடும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மற்றும் அதனுடன் சார்ந்த தீர்வுக் கட்டளை மற்றும் முற்றான கட்டளை தொடர்பான காரணம் ஒன்று.*

*கொழும்பு 10, டீ. பீ. ஜாயா மாவத்தையில், இல. 479 எனும் இடத்தில் பதிவு அலுவலகத்தை மற்றும் களனிய பியகம வீதியில் ரஜமஹா விஹாகரை சந்தியில் கிளை அலுவலகத்தை நடாத்திச் செல்லும் ஹற்றன் நஷனல் பேங்க் பீ.எல்சீ.*

*- வழக்காளி -*

*- எதிர்-*

*ஹேவாதந்திரிகே பிரியங்கி அனுஷா பீரிஸ், இல. 329, பியகம வீதி, சிங்காரமுல்லை, களனிய.*

*எதிராளி*

*கம்பஹா மாவட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்கம் கொண்ட வழக்கிற்கு அமைவாக முற்றாகக்கப்பட்ட பின்முற்றான தீர்வை பிரகடனத்தில் எதிராளியின் ஹேவாதந்திரிகே பிரியங்கி அனுஷா பீரிஸ் என்பவரினால் ரூ. 2,505,247.02 தொகை மற்றும் அதன் பொருட்டு 2017, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் முழுத்தொகையை செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 15% வீதம் வட்டியும், ரூபா 4,696,004.64 தொகை பொருட்டு 2017, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்புக் கட்டளைத் திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்புக் கட்டளை முழுத்தொகையை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 11% வீதம் வட்டியும், மற்றும் ரூ. 3,313,076.59 தொகை மற்றும் அதன் பொருட்டு 2017, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி தொடக்கம் தீர்ப்பு பிரகடனப்படுத்தப்பட்ட திகதி வரை மற்றும் அன்று தொடக்கம் தீர்ப்பிடப்பட்ட முழுத்தொகையை முழுமையாக செலுத்தி முடிக்கும் வரை அதன் பொருட்டு வருடாந்தம் 15% வட்டியும், செலுத்துவதற்கு தவறவிட்டுள்ள படியால் கீழ் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனங்கள் என்னால் 2019.10.04 ஆந் திகதி தடைக்குட்படுத்தி எதிராளிக்கு உரித்தான கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள்.*

***2021 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி மு.ப.11.00 மணிக்கு எதிராளியினுடைய ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.***

*குறித்த ஏல விற்பனையில் உயர்ந்தபட்சத்தை அடைந்தவர் கொள்வனவாளராவதுடன் ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேச கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் படி அரசாங்க கட்டணங்களும், விற்பனைத் தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரரின் தரகுப் பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலதாரருக்கு செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவ்வழக்கு பற்றாக குறித்த கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.*

*ஆதனம் அமைந்துள்ள இடத்திற்குச் செல்லும் வழி.*

*கொழும்பு - கண்டி வீதியில் பேலியகொடை முற்சந்தியிலிருந்து பியகம பாதைக்குத் திரும்பி கிலோமீற்றர் 03 வரை பிலபிட்டிய முற்சந்தியிலிருந்து முன்நோக்கி செல்கையில் இடதுபக்கமுள்ள பரனேஸ் கந்த வீதியில் 200 மீற்றர் வரை சென்ற பின்பு பரனேஸ் கந்த விஹாரைக்கு அருகாமையில் வலது பக்கத்தில் அடி 10 வரை அடியுள்ள தனியார் வீதியின் வலது பக்கத்திலுள்ள இரண்டு வீடுகளுக்கு அப்பால் பாதை முடிவடையும் இடத்தில் இந்த வீடு அமைந்துள்ளது.*

### மேற்படி அட்டவணை

*மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் சியனே கோரளையில் அதிகாரி பத்துவையில் களனிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிலபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் 363/ ஏ, சிங்காரமுல்லையில் அமைந்துள்ள பரனேஸ்கந்த பாதையில் வரிப்பணம் இல. 0/ 1 எனும் (உத்தியோகபூர்வ நில அளவையாளர் எம். டபி. டீ. எஸ். த சில்வா 1989.03.15 ஆந் திகதி துண்டு இல. 03 மற்றும் 04 ஒன்று சேர்த்து மீண்டும் பிரிக்கப்பட்ட கொன்கஹவத்த எனும் காணிக்கு) உத்தியோகபூர்வ அளவையாளரின் அளவைப்பட இல. 900 கீழ் 2013.01.31 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட துண்டு இல. 03 எனஅடையாளமிடப்பட்டுள்ள வடக்கு : எம். சோமரத்ன, காமனி மற்றும் மாக்ஸ் பெரேராவினுடைய காணி ; கிழக்கு : மாக்ஸ் பெரேராவினுடைய காணியும் ; தெற்கு: அரசுக்குரிய காணியும் ; மேற்கு : துண்டு இல. 02 மற்றும் 1 உம் (அடி 10 அகலமுடைய பாதைக்காக வேறாக்கப்பட்டுள்ள) குறித்த அளவைப்படஇல. 2990 க்கு அமைய பேர்ச் 12 விசாலங்கொண்ட காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் G54/119 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பதிவாளர்/பிரதி பிஸ்கல்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*கம்பஹா.*

*2021, மாச்சு 26.*

*4-504*

# நானாவித அறிவித்தல்கள்

## கிழக்கு மீளெழுச்சி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் கிழக்கு மீளெழுச்சி அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற் குறித்த கிழக்கு மீளெழுச்சி அமைப்பைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

1. ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலைக் கல்வியை மேம்படுத்துவதற்காக உடல் மற்றும் தர ரீதியாக உதவி மற்றும் ஆதரவை வழங்குதல் ;

2. விளையாட்டு, இலக்கியம், கலை மற்றும் கலாச்சாரத் துறைகளில் உள்ளார்ந்த திறமையடைந்த மாணவர்களை அடையாளங்காணல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்;

3. பாடசாலைக் குழந்தைகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் திறமைகளை வெளிக்காட்டவும், மதிப்பீடு செய்யவும் மற்றும் கலாச்சார பாடவிதான திறன்களை ஊக்குவிக்கும் நோக்கத்திற்காக திறமைகளைக் கொண்ட பிள்ளைகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.

புத்திக பதிரண,
பாராளுமன்ற உறுப்பினர்,
மாத்தறை மாவட்டம்.

4-674

---

## சமாதி தியான மற்றும் யோகாசன நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''சமாதி தியான மற்றும் யோகாசன நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) தேரவாத பௌத்த நடைமுறைமையினைத் தழுவி பௌத்த சம்பிரதாயங்களை மேம்படுத்தல்;

(ஆ) தியானம்/யோகாசனப் பயிற்சிகளை வழங்க தீவு பூராகவும் கிளைகளை ஆரம்பித்தல்;

(இ) சுனாமி/ வெள்ள அனர்த்தங்களின்போது உதவிகள் வழங்கல்,

பிறவும்.

புத்திக பதிரண,
பாராளுமன்ற உறுப்பினர்.

4-673

---

## சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''சமாதி சமூக அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) கல்வி வசதிகள் அற்று வறுமை நிலையில் உள்ள சிறுவர்கள் மற்றும் இளைஞர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை மற்றும் முன் பயிற்சி நடவடிக்கைகளை ஒழுங்கு செய்து நடத்துவதுடன் முன்னேற்றமடையச் செய்தலும் பொதுமக்கள் இளைஞர் கிராமங்களை ஒருமுகப்படுத்தலும்;

(ஆ) தொழில் முன்னிலைக் கல்வி பயிற்சி விளையாட்டுத்துறை பயிற்சி மற்றும் தலைமைத்துவம் கணனி, ஊடகவியல், தமிழ், ஆங்கிலம் மற்றும் ஏனைய மொழிப் பயிற்சிகளுக்கு ஏற்பாடு செய்தல் ;

(இ) மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஏதுவான விரிவுரைகள், கருத்தரங்குகள், நிறைவேற்று செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் சம்பந்தமாக கண்காட்சி கல்விப் பிரச்சார நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தலும் சூழல் பாதுகாப்பு மற்றும் சமநிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தலும் ;

பிறவும்.

புத்திக பதிரண,
பாராளுமன்ற உறுப்பினர்.

4-672

## சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

புத்திக பதிரண ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''சமாதி சுகாதார சேவைகள், சுற்றாடல், விவசாய, கலாசார மற்றும் விளையாட்டு நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

(அ) பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்கு விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் கல்விச் சுற்றுலா என்பவற்றை நடத்துவதன் மூலம் உதவுதல் ;

(ஆ) மக்களின் அறிவு விருத்தி தொடர்பான கல்விசார் விரிவுரைகள், கருத்தரங்குகள், நிறைவேற்று செயற்பாட்டு வழிகாட்டல்கள் தொடர்புடைய கண்காட்சிகள் மற்றும் கல்வி பிரச்சார நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல் ;

(இ) நூல் நிலைய வசதிகளை ஏற்படுத்துதலும் அனைத்து விதமான வெகுசன ஊடகத் (தொலைக்காட்சி, வானொலி, இணையம், புதினத்தாள்கள் மற்றும் வெளியீடுகள்) துறை தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளையும் அத்தகைய கூறுகளையும் பேணி வருதல் ;

பிறவும்.

புத்திக பதிரண,
பாராளுமன்ற உறுப்பினர்.

4-671

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.